தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 22

2011 செப்டம்பர் 8, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை"

இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும், கூர்மையும் ஒருசேரப் பெற்றவர்களுக்குத் தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் உண்டோ? இல்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

1. இரங்கல் தீர்மானம்

டெல்லி உயர் நீதிமன்ற வளாகம், குண்டுவெடிப்பில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் மனித நேயமற்ற சில தீய சக்திகளின் செயலால், 7—9—2011 புதன்கிழமை அன்று தலைநகர் டெல்லியில் உள்ள உயர் நீதிமன்ற வளாகத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வெடித்த சம்பவத்தில் 11—க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தது மட்டுமல்லாமல், 75—க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றுள்ளனர் என்ற துயரச் செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

[பேரவைத் தலைவர்] [2011 செப்டம்பர் 8

இந்திய மக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் உறையச் செய்த இக்கொடிய செயலுக்கு, இப்பேரவை கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் இதற்குக் காரணமான தீய சக்திகளைக் கண்டறிந்து, அவற்றை வேருடன் அழிக்க வேண்டுமென்று இப்பேரவை விழைகிறது.

இக்கொடிய வெடிகுண்டுச் சம்பவத்தில் தங்களுடைய இன்னுயிரை இழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், படுகாயமுற்றுத் தவிப்போருக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. இத்தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

95—

வாக்காளர் அட்டை

***2117—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாக்காளர் அட்டையினை இணைய வசதிமூலம் விண்ணப்பித்துப் பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாக்காளர் பட்டியல், சுருக்க முறை திருத்தக் காலங்களில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி